# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:15 வள்ளுவர்ஆண்டு2030 கார்த்திகை 15 புதன்கிழமை (01-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 04


காணாமற் போனோர் விடயம்:

## பாதுகாப்பு அமைச்சின் முடிவை கண்டித்து உண்ணாவிரதம்

### எதிர்வரும் ஞாயிறன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், டிசெ. 1

குடாநாட்டில் கைதாகிக் காணாமற் போனவர்களில் 355 பேரைத் தேடித்தர முடியாதவர்கள் எனத் தெரிவித்து அவர்களது உறவினர்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கடிதம் அனுப்பியிருப்பதைக் கண்டித்து எதிர்வரும் 5 ஆம் திகதி அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

மனித உரிமைகள் ஆணைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளுக்கு கருணைகாட்டக்கோரி சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

### மரண தண்டனையை ஒழிக்குமாறு கோஷம்

சென்னை, டிசெ. 1

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட நால்வருக்கும் கருணை காட்ட வேண்டுமெனக் கோரியும் —

மரணதண்டனை வழங்கும் முறை ஒழிக்கப்பட வேண்டுமெனக் கோரியும் —

நேற்று சென்னை நகரில் பெரும் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

'தமிழர் உயிர் காப்பு நிதிக் குழு' ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணியில் 50 பொது அமைப்புக்களைச் சேர்ந்த

[10 ஆம் பக்கம் பார்க்க]

வன்னியில் பட்டினி நிலைமை

# பாதை ஒன்றை உடனடியாக திறக்க அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை

## மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு கடிதம்

மன்னார், டிசெம்பர் 1

வன்னியில் சுமார் ஒரு மாதகாலமாகப் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டிருக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் பெரும் பட்டினி நிலைமை உருவாகி வருகிறது.

பாதுகாப்பான போக்குவரத்துப் பாதை ஒன்று உடனடியாகத் திறக்கப்படாவிடின் அந்த நிலைமை மிக மோசமடையும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மன்னார் ஆயர் அதி வண. இராயப்பு யோசெவ்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு விஜயம் செய்த ஆயர் அங்குள்ள மக்களின் நிலைமை தொடர்பாக ஜனாதிபதிக்கும் வடக்கு — கிழக்கு ஆளுநருக்கும் அவசர கடிதங்களையும் அனுப்பியுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு, பால்மா இன்றி குழந்தைகள் கதறி அழுவது வேதனை தருகிறது

### வன்னி நிலைமை குறித்து ஆயர் கவலை

மன்னார், டிசெ. 1

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேச மக்களின் நிலைமை மிக மோசமாக உள்ளது; உணவு, பால்மா இன்றி தாயைக் கட்டிப் பிடித்தவாறு கதறி அழும் குழந்தைகளின் நிலை வேதனை தருகின்றது.

மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசெவ் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுவில் தங்கியுள்ள ஆயர் கடந்த ஞாயிறன்று இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு விஜயம் செய்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சகல பாடசாலைகளிலும் இன்று கறுப்புப்பட்டி அணிந்து போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

மடுத்தேவாலயம் மீது கடந்த 20 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்தும், உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியும் வடக்கு-கிழக்கில் உள்ள பாடசாலைகளில் இன்று கறுப்புப் பட்டி அணியும் போராட்டம் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் போராட்டத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் அனைவரையும் பங்குபற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் ஆசிரியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபடுவர்.

இந்தப் போராட்டத்துக்கான சகல ஏற்பாடுகளும் யாழ். மாவட்டத்திலும் செய்யப்பட்டுள்ளன என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

### பல்கலைக்கழக மாணவரும் இன்று கறுப்புப்பட்டி அணிவர்

யாழ்ப்பாணம், டிசெ. 1

மடுத்தேவாலயத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்த மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று கறுப்புப்பட்டி அணியும் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

கறுப்புப்பட்டி அணிந்து வழமையான செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுவர் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மடுவில் தஞ்சமடைந்தோர் அடிப்படை வசதியின்றி அவதி

மன்னார், டிசெ. 1

மடுத்தேவாலயம், தட்சனார்மருதமடு ஆகிய இடங்களில் தஞ்சம் அடைந்துள்ள 15 ஆயிரம் அகதிகள் அடிப்படை வசதிகள் இன்றிக் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பெருநிலப்பரப்பில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் அங்கு தங்கியுள்ளனர் என்றும்—

போதிய இருப்பிட வசதி மற்றும் அடிப்படை வசதிகள் இன்றி அவர்கள் கஷ்டப்படுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

அவசரமாக ஆயிரம் கூரை விரிப்புக்களை வழங்குமாறு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எம். எஸ். எவ் வைத்திய குழு மட்டும் அங்கு பணிபுரிந்து வருகின்றது என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் கண்காணிப்புப் பணி:

## 15 நாடுகளைச் சேர்ந்த 22 பிரதிநிதிகள் வருவர்

கொழும்பு, டிசெ. 1

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 15 நாடுகளைச் சேர்ந்த 22 சர்வதேசப் பார்வையாளர்கள் பணியில் ஈடுபடவிருக்கின்றனர் எனப் பதில் தேர்தல் ஆணையாளர் டி.பி. தஸநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களிலும் தலா ஒவ்வொருவர் என்ற ரீதியில் இவர்கள் பணிபுரிவர்.

கொழும்பில் உள்ள மேற்கு நாடுகளின் தூதரகங்கள் ஊடாக அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது என்றும் —

அந்த நாடுகளைச் சேர்ந்த 22 பிரதிநிதிகள் இங்கு வருவர் என்றும் —

தேர்தல் தினத்துக்குச் சில தினங்களுக்கு முன்னர் இங்கு வரும் இவர்கள் தேர்தல் முடிந்த பிறகு சுமார் ஒருவார காலம் இங்கு தங்கியிருப்பர் எனவும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான இறுதி முடிவுகளை எடுக்க எதிர்வரும் 10 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதாகவும் அவர் சொன்னார். (ஐ-3-6)

ஐ. தே. க. அலுவலகம் மீதான

## தாக்குதலுக்குப் பயன்படுத்திய இரு வாகனங்கள் மீட்பு!

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகமான ஸ்ரீ கோத்தா மீது நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலின் போது பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு வாகனங்களை மீரிகான பொலீஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வான் ஒன்றும், மோட்டார்க் கார் ஒன்றுமே மீட்கப்பட்டு பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன.

குறித்த வானின் சாரதியை விசாரணைக்கு உட்படுத்திய பொலீஸார் மேலதிக விசாரணைக்காக அவரைத் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-7]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000 ஆம்ஆண்டு
புதிய வகுப்புகள்
Gr 4 இல் இருந்து
O/L வரை
ஆரம்பம்:
06-12-99
Mon. 3.00 P. M.
சிறந்த பெறுபேறுகளுக்கு
SHAMROCK
யா/ஈச்சமோட்டை வீதி,
(சி/ 10048)

# இசை நடனக் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு, டிசெ. 1

மட்டக்களப்பு இசை நடனக் கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் கல்லூரிக்கு முன்பாக நின்று பகிஷ்கரிப்புப் போராட்டத்தை நடத்தினர்.

கிழக்கிலங்கைப் பல்கலைக் கழகத்துடன் இசை நடனக் கல்லூரியை இணைக்கவேண்டுமெனக் கோரி கல்லூரிக்கு உள்ளே வகுப்புக்களை பகிஷ்கரித்து வந்த மாணவர்கள் நேற்று முன்தினம் வெளியே நின்று இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு கல்லூரிக்கு வெளியே நின்ற மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

''4வருடபட்டச்சான்றிதழ் பட்டம் விடவா'' ''இந்து சமய திணைக்களமே மாணவர்களை இனியும் புறக்கணிக்காதே'' ''இசை நடனக் கல்லூரியை கிழக்கிலங்கை இசை நடனக் கல்லூரியுடன் இணைப்பதே எங்கள் குறிக்கோள்'' ஆகிய சுலோக அட்டைகளை மாணவர்கள் தாங்கிக் கொண்டிருந்தனர்.

பகிஷ்கரிப்பு தொடர்ந்து நடைபெறும் என்று மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டது. (இ-5)


புதுவருடத்தை முன்னிட்டு
குறைந்த கட்டணம்!
ஸ்ரீ கிருஷ்ணா
தொலைத் தொடர்பு சேவை
★ உள்ளூர்: 070 — 212411 ரூபா 5/-
★ வெளியூர்: 0094 —70—212411 ரூபா 80/-
உள்வரும் அழைப்பு ரூபா 3/-
இரவு, பகல் முழுநேர சேவை.
உங்கள் தேவைக்கேற்ப எங்கள் நிறைவான நிரந்தர சேவை.
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி.
உரிமையாளர்.
[71414]

## உலர் உணவு நிவாரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

டிசெம்பர் மாதத்துக்குரிய உலர் உணவு நிவாரணத்தை உடனடியாக வழங்குமாறு குடாநாட்டிலுள்ள சகல ப.நோ கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிவாரணத்துக்கென சிவப்பு நாட்டரிசி, வெள்ளைச்சீனி, பருப்பு,பால்மா என்பன வழங்கப்படவுள்ளன.என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதுள்ள மழைகால நிலைமையைக் கருத்தில் கொண்டே இவை விரைவில் வழங்கப்படவுள்ளன என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ-10)

## குமணவில் அரிசி

யாழ்ப்பாணம், டிசெ. 1

செயலகத்துக்குரிய 3 ஆயிரத்து 250 மெ. தொன் அரிசி மற்றும் தனியொருவருக்கான 22 வாகனங்கள் என்பவற்றை ஏற்றிக்கொண்டு குமண கப்பல் கடந்த வாரம் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்ட ''பிக்கப்'' வாகனங்களும் இந்தக் கப்பலிலேயே எடுத்து வரப்பட்டன.

## 11 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரத்துவமெய்திய

திருமதி

### இ. இராஜேஸ்வரி

''சமூகஇரத்தினம்'' M. K. இளையப்பு J. P. அவர்களின் வாழ்க்கைத் துணைவி

தோற்றம் 06-03-1937 மறைவு 01-12-1988

மறைவு பெற்று ஆண்டுகள்
பதினொன்றானாலும்
நினைவு கொண்டு தினமும்
நாம் போற்றுகின்றோம்.
ஓம் சாந்தி !

- குடும்பத்தினர்.

''குமரகிரி'',
கோப்பாய்.
[71407]

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 02 — 07 — 1931



விண்ணில் 01 — 11 — 1999

அமரர்

### நிக்கிலஸ் செபமாலை

[ ஓய்வுபெற்ற ஆசிரியர் ]

செபமாலை எனும் நாமம் தாங்கி
செபமாலையே தினமும் ஓதி
தெய்வமாகிவிட்ட எம் தலைவா!
கண்ணிமைக்கும் நேரத்தில்
பிரிந்ததென்னோ உங்களுயிர்
நாள்கள் முப்பத்தொன்று தான்
ஓடிமறைந்தாலும் எம்மனத்திரையில்
மறைக்க முடியாதையா உங்கள் உருவத்தை
எம்மால் மறக்க முடியாதையா

என்றும் துயருடன்
மனைவி, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிமார், பெறாமக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(71415)

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
அர்ஜுன் – மீனா, ரம்பா
மற்றும் பலர் நடித்த
செங்கோட்டை
10-30, 2-30,
3 ஆம் திகதி முதல்
மகாபிரபு
(சி/9952)

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜுன் – குஷ்பு
மற்றும் பலர் நடித்த
ரோஜாவைக் கிள்ளாதே
காட்சிகள்:
11-00, 2-30, 5-00
(புதிய நேரம்)
(71419)

லிபேட்டி அச்சுவேலி.
முரளி – ரோஜா
நடித்த
★ ஊட்டி
காட்சிகள்: 10-30, 2-30
T.P. No. 070-212223
070-212678
(71295)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் நாகம்மா

இல. 17, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் நாகம்மா 30 – 11 – 99 செவ்வாய்க்கிழமை காலமானார்;

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாவதி, முத்து ஆகியோரின் மகளும் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை வைத்திலிங்கம் (PWD ஓவசியர், கண்டி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முத்தையா பாக்கியத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (அதிபர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கொட்டகல), முத்தையா சுப்பிரமணியம் (பிராந்திய ஆணையாளர் வவுனியா), தவமணிதேவி, கணேசம்மா, தணிகாசலம் (ISA வவுனியா), செல்வநாயகி, நவமணிதேவி, தெய்வேந்திரராஜா (லண்டன்), ஆனந்தராணி (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் தேவாம்பிகை நாகேஸ்வரி, இராமநாதன் (T. O திருகோணமலை), சிவப்பிரகாசம் (துறைமுக அதிகார சபை), பவளராணி, காலஞ்சென்ற பாலேந்திரா, கோபாலகிருஷ்ணன் (கணக்காளர்), டில்லிராணி (லண்டன்), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இல 54/5, உவர்மலை மத்திய வீதி திருகோணமலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து 2 – 12 – 99 அன்று மாலை 4 மணிக்கு திருமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு மு. சுப்பிரமணியம்

54/5, உவர்மலை மத்திய வீதி,
திருகோணமலை.
026 – 22018
[71429]

## திருமதி கனகாம்பிகை சதாசிவக்குருக்கள்

நாயன்மாரிகட்டு அரசடிப் பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தா அமரர் செ. சதாசிவக் குருக்கள் அவர்களின் அன்புத் துணைவியார் திருமதி கனகாம்பிகை சதாசிவக் குருக்கள் நேற்று (30—11—99) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவக் குருக்களின் அன்பு மனைவியும், தனலட்சுமி, காலஞ்சென்ற ஆறுமுகக் குருக்கள், மகேஸ்வரக் குருக்கள், மகாலிங்கசிவக் குருக்கள், திலகவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் முத்துச்சாமிஐயர், பத்மாவதி, விஜயலட்சுமி, விக்னேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியாரும் அனுஷியா, சசிதரன், மேனகா, காயத்திரி, பாலசதாசிவன், கோகிலன், சங்கரி, வித்தியாசாகர், ஜெயராஜ் ஐயர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-12-99) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. மகேஸ்வரக் குருக்கள்
ச. மகாலிங்கசிவக் குருக்கள்

அரசடிப் பிள்ளையார் கோயில்,
நாயன்மார்கட்டு,
நல்லூர்.
(71421)

## திருமதி சண்முகலிங்கம் நல்லம்மா

தாவளை இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகலிங்கம் நல்லம்மா அவர்கள் 28 – 11 – 99 அன்று கொழும்பில் காலமானார்

அன்னார் தாவளை இயற்றாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளைகனகம்மாவின் சிரேஷ்ட புதல்வியும் சண்முகலிங்கத்தின் அன்பு மனைவியும் அமரர் வைகுந்தவாசன், இராஜபவானி, மனோகரவாசன் [ஜேர்மனி], பத்மாவதி [வவுனியா], நிர்மலா [வவுனியா], திரிபுரவாசன்[ஜேர்மனி], தில்லைவாசன் [இத்தாலி], சக்திவேல் [ஜேர்மனி], சண்முகதாஸ். ஞானவேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாணிக்கவாசகர், சத்தியபாலன் [இலங்கை வங்கி வவுனியா], கலாறஞ்சன், சீதாதேவி, குணதீஸ்வரி, கிருத்திகா, பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும் இரத்தினேஸ்வரி குலமணி, இராஜேஸ்வரி, முருகமூர்த்தி, மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் இராசம்மா, அமரர் மயில்வாகனம், சொர்ணம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் மற்றும் சிவராஜ், நிருபராஜ், வித்தியா, இளங்கோபன், நந்தகோபன், பிரசன்னா, அருள்பிரகாஷ், மிதிலாசினி, கோபிநாத், மதன்ராஜ், யசோ, டினோஜன், கம்ஷியா, றஞ்சி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-12-99(இன்று) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 3.00 மணி அளவில் கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
மாணிக்கவாசகர், (மருமகன்)
இராஜபவானி, (மகள்)

பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.
(71412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் (UNDP) நிதியுதவியுடனான ஐ.நா. திட்டச் சேவைகள் அலுவலகம் (UNOPS)/யாழ்ப்பாணம் புனர்வாழ்வு மீள் குடியேற்ற நிகழ்ச்சித்திட்டத்தின் (JRRP) கண்ணிவெடி விழிப்புணர்வுத் திட்டம்

இதழ் - 3

## பயிற்சிப் பட்டறைகள்

UNOPS/JRRP இனால் கார்த்திகை 15 ஆம் 16 ஆம் திகதிகளில் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் இரு முழுநாள் பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன. சமூக மட்டத்தில் கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வை விரைவாக ஏற்படுத்தும் நோக்கில் இவை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

மக்கள் மத்தியில் சேவையாற்றும் குறிப்பாக விவசாயிகளோடு நேரடியாகத்தொடர்புடைய சில அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் இப்பட்டறைகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். 15 ஆம் திகதி நடந்த பட்டறையில் விவசாயத்திணைக்களத்தைச் சேர்ந்த விவசாயப் போதனாசிரியர்கள், கமநல சேவைகள் திணைக்களத்தைச்சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோரும் 16 ஆம் திகதி நடத்தப்பட்ட பட்டறையில் கெயார், பட்டினிக்கெதிரான நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.



## மதிப்பீட்டுப் பரீட்சைகள்

பாடசாலை மட்டத்தில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி, அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றில் இடம்பெற்று வந்த கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வு வகுப்புகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவ் வகுப்புகளில் கற்பிக்கப்பட்ட விடயங்கள் எவ்வளவு தூரம் மாணவர்களைச் சென்றடைந்துள்ளது என்பதை மதிப்பீடு செய்வதற்காக பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

இதுவரை இம்மூன்று கல்லூரிகளிலும் ஆண்டு 5 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்குப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன. ஆரம்பப்பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

## வானொலி நிகழ்ச்சி

கண்ணிவெடி சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சிறிய உரைச்சித்திரங்கள் பண்பலை வரிசையில் ஒலிபரப்பாகும் யாழ் சேவையில் ஒலிபரப்பப்படுகின்றன. இவை சிறுவர் பாதுகாப்பு நிதியம் (SCF), திருமறைக்கலா மன்றம் ஆகியவற்றின் உதவியுடன் UNOPS/JRRP இனால் வழங்கப்படுகின்றன.

## இன்றைய நல்ல சிறுவர்கள்

சிறுவர் சிறுகதை



ஓர் ஊரிலே மூன்று சிறுவர்கள் நண்பர்களாக இருந்தார்கள். அவர்கள் மூவரும் ஒருநாள் சந்தைக்குச் சென்றார்கள். செல்லும் வழியில் வீதியோரத்தில் மிதிவெடி ஒன்று இருப்பதைக் கண்டார்கள். உடனே மேலே செல்லாது அவ்விடத்திலேயே நின்று மூவரும் சேர்ந்து ஆலோசித்தார்கள். பின்னர் மூவரும் வந்த பாதையிலேயே திரும்பி நடந்தார்கள்.

சிறிது தூரத்தில் அங்கொரு பெரியவர் வயலில் வேலை செய்து கொண்டு நின்றார் மூன்று சிறுவர்களும் அவரிடம் சென்று "பெரியவரே நாங்கள் சந்தைக்குச்செல்லும் போது வழியில் ஒரு மிதிவெடியைக்கண்டோம். உடனேஅப்படியே திரும்பி வந்துவிட்டோம்." என்று பயத்துடன் கூறினார்கள்.

இதனைக் கேட்ட பெரியவர் அவர்களை அழைத்துச் சென்று மிதிவெடிக்குச் சற்றுத் தொலைவில் பாதையின் குறுக்கே மரக்கொப்புகளால் அடையாளமிட்டார். பின்பு அவர் சிறுவர்களை பத்திரமாக வீட்டுக்கு அனுப்பிவிட்டு மிதிவெடி குறித்த தகவலைத் தெரிவிப்பதற்காக யாழ் கச்சேரிக்குச் சென்றார்.


க.பவித்திரா
ஆண்டு 5B
சென் பெனடிக் வித்தியாலயம்
நல்லூர்

சென்ற இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஓவியத்திற்கு பல நேயர்கள் ஆர்வத்துடன் கவிதைகளை எழுதி அனுப்பியிருந்தார்கள். அனைவருக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவற்றுள் "பலமிகு நங்காய் பார்த்து நடப்பாய்" என்ற கவிதை சிறந்த ஆக்கமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.



பாகிஸ்தானி P4 (மிதிவெடி)

* உயரம் - 45 மி.மீற்றர்
* விட்டம் - 72 மி.மீற்றர்
* வெளியுறை - மண்ணிறப்பிளாஸ்டிக்



வகை 72 (மிதிவெடி)

* உயரம் - 39 மி.மீற்றர்
* விட்டம் - 79 மி.மீற்றர்
* வெளியுறை - பச்சைநிறப்பிளாஸ்டிக்



ஜொனி (மிதிவெடி)

* உயரம் - 6 செ.மீற்றர்
* நீளம் - 10.5 செ.மீற்றர்
* அகலம் - 7 செ.மீற்றர்
* வெளியுறை - பச்சைநிற மரப்பெட்டி



## உண்மை தெரிந்தது

கற்பனைகளைச் சுமந்துகொண்டு
வாசல் கதவினைத் திறந்துகொண்டு
வீதியில் கால் பதித்த போது~ அங்கே
விபரீதங்கள் காத்திருந்தன

பாடசாலை விடுமுறையில் தந்தையோடு
வயலுக்குப் போன என் தோழன்
வரம்பிலே கிடந்த விநோதமான
பொலித்தீன் பையை எடுக்கப்போய்~ அந்த
வயலிலே சிதறிப்போனதையும்

பிள்ளையார் கோவில் திருவிழாவிற்கு
பூப்பறிக்கப்போன என் நண்பன்
பிளாஸ்டிக் டப்பாவைத் தொடப்போய்
கருகிப்போய்ச் சிதறிக் கிடந்த
பூக்களோடு பூக்களாய்ப் போன
செய்தியையும் கேட்டபோது

வானம் மட்டும்தான் வெளித்திருந்தது~ நம்
வாழ்வு இன்னும் வெளிக்கவில்லை என்ற
உண்மையை உணர்ந்து கொண்டோம்

சி. பத்மயன்
ஆண்டு 3
சென் பெனடிக் வித்தியாலயம்

## கண்மணிகாள் கவனம்

கண்மணிகாள் கவனமாகச்சென்று வர வேண்டும்
கண்ணிவெடி வழியருகே கிடக்கும் மிகக் கவனம்
கண்ட கண்ட பொருட்களை கையில் எடுக்க வேண்டாம்
கண்ணிவெடி, அழுக்க வெடியாகவும் இருக்கவும் கூடும்
கணப்பொழுதில் அது வெடித்து கை கால்கள் சிதறவும் கூடும்
மேனி எங்கும் காயங்களும் ஏற்படலாம்
வீணிலே நாம் வருந்தி கவலை பல அடைய நேரும்

க.வினோஜா
ஆண்டு 3
சென் பெனடிக் வித்தியாலயம்

மிதி வெடி
MINES

நீங்கள் விளையாடிக்கொண்டிருக்கும் போது உங்கள் பந்து காவலரணின் உட்புறம் விழுந்துவிட்டால் அதனை எடுப்பதற்காக அப்பகுதியினுள் நுழைய வேண்டாம்.

## பலமிகு நங்காய் பார்த்து நடப்பாய்

இயற்கை நிறைந்த இனிய சாலையில்
பயத்தை அறியாப் பள்ளி மாணவியே
நயத்துடன் இரசித்து நடந்து செல்வாய்
வியப்புக் கொள்வாய் வருவிபத்தினை அறியாய்

விதிப்படி வாழ்வென வீணே இயம்பாது
மதிகொண்டு இயங்கும் மனமது கொண்டு
மிதிவெடி உன்தன் பாதையின் அருகில்
சதிசெய்ய இருப்பதைச் சடுதியாய் காண்பாய்

விடுப்புக் கொண்டு விரல்தனை நீட்டாய்
விடுஇதை என்றும் விரைவு கொள்ளாய்
நடுஒரு குறியினை குறிப்பாய் உணர்த்த
கடுவினை தன்னைக் கருத்தினில் காட்ட

நடந்த சுவடுவழி நன்கு திரும்பி
கடக்கும் மக்களின் காதினில் நிறுத்தி
விடயம் தன்னை விதானைக்கு எட்ட
நடவடிக்கை எடுத்து நற்பணி புரிவாய்

நலமது காப்பாய் நம்மக்கள் காப்பாய்
விலை மதிப்பில்லா உடலுயிர் காப்பாய்
நிலமிசை பாதம் நித்தியம் பயின்றிட
பலமிகு நங்காய் பார்த்து நடப்பாய்

செல்வி சி.சிவமலர்,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

நீங்கள் அறியாத பொருட்களைத் தொடக்கூடாது. ஏனெனில் அது கண்ணிவெடியாக இருக்கலாம்.

மேலே தரப்பட்டுள்ள எச்சரிக்கை வாசகங்களைப்படிக்கும் போது உங்கள் எண்ணத்தில் உதிக்கும் கருத்துகளை கவிதையாகவோ சிறுகதையாகவோ எழுதி அனுப்புங்கள். உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

**கண்ணிவெடி செயற்திட்ட மையம்,**
**யாழ் புனர்வாழ்வு மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டம்(JRRP),**
**கச்சேரி,**
**யாழ்ப்பாணம்.**

**கண்ணிவெடிகளால் ஏற்படும் நிரந்தர அங்கவீனம் உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அன்ரன் செல்வக்குமாரி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (602712133V) தாவடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல.89/2, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (71382)

கிளானை கொல்லங்கலட்டி என்ற முகவரியைச் சேர்ந்த இராசரத்தினம் தினேஸ்கரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (803620598V) விசேட அ. அட்டை (0907020568) என்பன 28-11-99 அன்று கந்தரோடை சின்னக்குளத்தடியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கந்தரோடை கலைமதி சனசமூக நிலையத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகின்றனர். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [71403]

நீர்வேலி வடக்கு. நீர்வேலியைச் சேர்ந்த பத்மநாதன் பார்த்தீபன் என்பவரது தேசிய அடையாள அட்டையும், விசேட அ. அ. (இல. 0903021764) யும் 25-11-99 அன்று யாழ்ப்பாணத்துக்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (71376)

உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் என்ற முகவரியுடைய வேல் முருகன் சுதனி ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும் (757102811V) குடும்பப்பதிவுப் பத்திரமும் ஓர் அப்பியாசக் கொப்பியுடன் 27-11-99 அன்று கரணவாய் கலட்டி வீதிக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மொடேர்ன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி, கரவெட்டி என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (71390)

## காணவில்லை

டோமன் இன பெண் நாய் நாலுவயது மண்ணிறம் வால் இல்லை சிவப்புநிற பட்டியுடன் ஞாயிறு இரவு முதல் நாவலர் வீதி, கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள வீட்டில் இருந்து காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். இல. 598 [378] நாவலர் வீதி அரியாலை. [71395]

## விற்பனைக்கு

பெரிய மர அலுமாரி 10'×5' இரும்பு கேற், T V (கலர்), சீலிங்பான் (Fan), 12' அலுமினிய ஏணி, சிறிய மேசை, ஸ்ரூல், டிறங்பெட்டி, தைலாப்பெட்டி, ஸ்ரீல்லாச்சி மற்றும் பாவனையில் உள்ள குசினிப் பொருள்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: முத்துவேல், கோப்பாய் வடக்கு, [A G A. காரியாலயம் அருகில்]. [71401]

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (புறொயிலர்) கல்பேட்ஸ் விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம், தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (71373)

இறைச்சிக்கோழி புறொயிலர் கல்பேட் விற்பனைக்கு உண்டு. தினமும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தல் இலவசம். தொடர்புகளுக்கு: கண்ணா வீடியோ சென்ரர் வளவு, இல. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (71186)

## விற்பனைக்கு

பொமனேரிய இன மண்ணிற வெள்ளை நிறம் கலந்த இரு ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S. பரமேஸ்வரன் பொன்னாலை வீதி, மானிப்பாய் (பழைய தபாற் கந்தோர் அருகில்). [71392]

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள CD 125 HONDA TWIN மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குட்டி, வெங்காயச்சங்க ஒழுங்கை, கோப்பாய், வடக்கு. (சி/10025)

## COMPUTER CLASSES

Well Experienced Computer Qualified Graduate Teacher Conducting Private Special Computer Classes Contact. M J. Jeyathees Jeya Mahal Kalikovilady Thirunelvely East, Jaffna T P. No. 2892. [71352]

## இறைச்சிக் கோழிகள் தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை நல்ல விலை கொடுக்கப்படும். உடன் தொடர்பு கொள்ளவும். தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (71394)

# ஏல விற்பனை

கச்சேரி வளவில் தறிக்கப்பட்ட 30 கன அடி தேக்குமரம் (23' நீளம் - 4' சுற்று) 06 - 12 - 1999 திங்கட்கிழமை மு.ப. 11.00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். ஏலத்தில் பெறுபவர்கள் கேள்வித்தொகையை உடனேயே செலுத்தி மரத்தை அன்றே அப்புறப்படுத்துதல் வேண்டும். அலுவலக நேரத்தில் மரத்தைப் பார்வையிடலாம்.

அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/10043)

# பதவி வெற்றிடம்

01-01-2000 முதல் வெற்றிடமாகும் யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ். கல்வி வலயத்தைச் சார்ந்த அதிபர் தரம். I, II இல் உள்ளோர் தமது சுயவிவரங்களுடன் 07 - 12 - 99ஆம் திகதிக்கு முதல் கிடைக்கக் கூடியதாக எனக்கு அனுப்பி வைக்கவும்.

பதில் வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயத் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

[சி/10041]

# வள்ளுவர் அக்கடமி

உரும்பிராய்.

## புதிய கல்வியாண்டு - 2000

ஆரம்பம்: 05 - 12 - 1999 ஞாயிற்றுக்கிழமை
அனுமதிகள் 01 - 12 - 1999 புதன்கிழமை முதல் வழங்கப்படுகின்றன.

அனுமதி பெறுபவர்கள் பெற்றோருடன் வந்து முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(71408) அதிபர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி முருகேசு மாணிக்கம்

(மட்டுவில் வடக்கு)

மலர்வு: 13- 01- 1902
உதிர்வு: 11- 12- 1998

திதி: 01- 12- 1999

எம்பரம்பரையின் குல விளக்கே- நீ
எம்மையெல்லாம் விட்டகன்று
ஓராண்டு ஆனாலும்
எம் நெஞ்சம் துடிக்குதம்மா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (71409)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சோமசுந்தரம் பாக்கியம்

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் பாக்கியம் 29 - 11 - 99 இல் காலமானார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் பாஸ்கரன் (சுவிஸ்), பற்பராணி (அமெரிக்கா), பாலகுமார் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதா (சுவிஸ்), சோதிலிங்கம் (அமெரிக்கா), புஷ்பலதா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜந்தினி (அமெரிக்கா), அரிசென்யா (அமெரிக்கா), பானுஜா (சுவிஸ்), விதுஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30-11-99) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திரு. சோமசுந்தரம்
(கணவர்)

கோப்பாய் வடக்கு. (71405)

## திருமதி சிவராமன் சரஸ்வதி

இலங்கயன் பதிப்பகம் [ஸ்ரீ லங்கா அச்சகம்] உரிமையாளர் சண்முகம் சிவராமன் அவர்களின் அன்பு மனைவி திருமதி சிவராமன் சரஸ்வதி அவர்கள் 28 - 11 - 1999 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 1-12-99 புதன்கிழமை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் (Flat No 1, Plot No. 1051, A.K. Tower, Block No.1 35th Street, Annanagar west, Madras — 40. Phone No. 6286913.) நடைபெறும்

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
சி. சண்முகலிங்கம்
முகாமையாளர்
யாழ். இலங்கயன் பதிப்பகம்

234 A, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். (71410)

உ
ஸ்ரீ ராம ஜெயம்

# பூப்புனித நீராட்டு விழா

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரம்மாதி வருடம் கார்த்திகை மாதம் 17 ஆம் நாள் (03 - 12 - 1999) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரம் கூடிய காலை 6.15 மணி முதல் 7.45 மணி வரையுள்ள தனு லக்கின சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரி திருநிறைசெல்வி
## சிவாஜினி
அவர்களுக்கு

பூப்புனித நீராட்டி ருது சாந்தி செய்ய இறைவன் திருவருள் துணை கொண்டு பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
திரு. திருமதி மனோகரன் மல்லிகாதேவி தம்பதிகள்

மல்லிகா ஸ்ரோர்ஸ்
சந்தை முன்பாக
மானிப்பாய்.
T.P. 021 - 2887

மல்லிகாபதி
மானிப்பாய்.
T.P. 021 - 2887

[சி/10042]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஈழம்' வழங்காமலேயே தீர்வைக் காண்பேன்!

## ஜனாதிபதி சந்திரிகா சூளுரை

கொழும்பு டிசெ. 1

''விடுதலைப் புலிகள் கேட்பது போன்று அவர்களுக்கு ஈழத்தைக் கொடுக்காமலேயே இந்த நாட்டில் சமாதானத்தைஏற்படுத்துவேன்'' என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

கெக்கிராவையில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலேயே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

விடுதலைப்புலிகள் தங்களுக்கென தனியான நாடு ஒன்றை உருவாக்கப்போவதாகக் கூறி வருகின்றனர். இதேவேளை அந்த ஈழம் உருவாகாமலேயே தொடரும் இனப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர எனது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தொடர்ந்தும் யுத்தத்தை நடத்தாமல் தீர்வு ஒன்றை நடைமுறைப்படுத்துவதே எனது திட்டம்—என்று அவர் மேலும் கூறினார்.

(உ-7)

# பிரபாவின் நிபந்தனைக்கு அரசு இணங்க நேரிடும்

## ராஜதந்திரி ஒருவர் கருத்து

கொழும்பு, டிசெ. 1

போர்க்களத்தில் பெற்ற வெற்றியின் களிப்பில் உச்சாணிக் கொப்பிலிருக்கும் பிரபாகரன் அதன்மூலம் தமது நிபந்தனைகளுக்கு இணங்கிச் சமரசப் பேச்சுக்கு வர அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கலாம் என்று மேற்குநாட்டு ராஜதந்திரி ஒருவர் கருத்து வெளியிட்டார்.

தலைவர் பிரபாகரனின் மாவீரர்தினஉரைதொடர்பாகக் கருத்து வெளியிடுகையிலே அவர் இவ்வாறு கூறியதாக வானொலிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மற்றுமொரு ராஜதந்திரி கருத்து வெளியிடுகையில் கூறியதாவது:-

அரசுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு பிரபாகரன் முன்வந்திருப்பது அரசியல் தீர்வே அவரது உண்மையான விருப்பம் என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த காலத்தில் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்தை நிராகரித்துவந்துள்ளார்; என்றாலும் அது தொடர்பாக அவர் தனது மனதை மாற்றிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்படலாம்.

அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சினை தொடர முடியும்.

இருதரப்பும் பேச்சு நடத்த வேண்டுமானால் பெருமளவு விட்டுக்கொடுத்து இணங்க வேண்டியிருக்கும்.

அரசும் — புலிகளும் ஒருவரை ஒருவர் நம்புவதில்லை என்பதால் 3 ஆம் தரப்பின் உதவியில்லாமல் விட்டுக் கொடுப்புக்குச் சாத்தியமில்லை— என்றார்.

(உ-5)

# இருதார திருமணத்துக்கு 15 மாதக் கடூழியம்

தென்மராட்சி, டிசெ. 1

பதிவுத் திருமணம் செய்த மனைவியை கைவிட்டு, வேறொரு பெண்ணை பதிவுத்திருமணம் செய்தவருக்கு சாவகச்சேரி நீதிமன்றம் 15 மாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது.

நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த பொன்னையா பத்மநாதன் என்பவருக்கே இந்தத்தண்டனை வழங்கப்பட்டது.

இப்பகுதியில் உள்ள ஒரு பெண்ணைப் பதிவுத் திருமணம் செய்து அவருடன் வாழ்ந்து பின்னர், வேறொரு பெண்ணை பதிவுத்திருமணம் செய்ததாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்ட வழக்கிலேயே மேற்படிதீர்ப்பு திங்களன்று வழங்கப்பட்டது.

(உ-118)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

அரியாலை, டிசெ. 1

யாழ் மாநகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகமாநகர பதில் ஆணையாளர் சி. மா. பொன்னம்பலம் தெரிவித்தார்.

கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டால் எக்காரணம் கொண்டும் திருப்பி வழங்கப் பட மாட்டாது என்றும் — எனவே பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறும் பதில் ஆணையாளர் கேட்டுள்ளார்.

(இ-17)

# ஒளி விழா

பலாலி ஆசிரியர்கலாசாலை கத்தோலிக்க ஆசிரியர் மாணவமன்றத்தின் ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

மன்றத்தலைவர் ஜி. என். மனோகரன் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் பிரதம விருந்தினராக புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருள் திரு ஜே. நீக்கிலஸ் கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [6-103]

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ். பல்கலைக்கழக நல்லாயன் நடுநிலையத்தில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு ''குழுவாகச் செயற்படும் ஆற்றலை வளர்த்தல்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இடம் பெற உள்ளது (இ-6]

# இன்று காங்கேசனுக்கு

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். ஸ்ரீதரன் இன்று காங்கேசன்துறைக் கைதிகள் தடுப்பு முகாமுக் [illegible] ளார்.

(இ-6-10)

# பயணப்பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ். குடா நாட்டில் இருந்து வெளி இடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (நவம்பர் 30 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:—

சங்கானை

(117537ஏ), (117537பி), (123366ஏ), (125112ஏ), (125112பி), (125112சி), (125112டி), (125121ஏ), (125264ஏ), (125307ஏ), (125405ஏ), (125405பி), (127017ஏ), (127017பி), (127026ஏ), (127026பி), (127067ஏ), (127067பி), [127317ஏ], [127333ஏ], [127443ஏ], [127496ஏ], [127496பி], [127496சி].

சாவகச்சேரி

[124379ஏ].

நெடுந்தீவு

[124983ஏ].

யாழ்ப்பாணம்

(124856ஏ), (126626ஏ), (126626பி), (126786ஏ), (126786பி), (126799ஏ), (226799பி), (126800ஏ), (126800பி), (126860ஏ), (126879ஏ), (126911ஏ), (126954ஏ).

கரவெட்டி

(122054ஏ), (122054பி), (122351ஏ), (122351பி), (125532ஏ), (125532பி), (125546ஏ), (125546பி), (125546சி), (125546டி), (125996ஏ).

கோப்பாய்

(121083ஏ), (121083பி), (122983ஏ), (122983பி), (124039ஏ), (133117ஏ), (133118ஏ), (133123ஏ), (133127ஏ), [133127பி].

நல்லூர்

[121322ஏ], [122954ஏ], [122963ஏ], [123164ஏ], [123164பி], 124235ஏ], [124237ஏ], [124246ஏ], [124258ஏ], [124308ஏ], [124308பி], [124326ஏ], [124371ஏ], [124374ஏ], [124416ஏ], [124436ஏ], (124460ஏ), (123557ஏ), [127470ஏ], (127470பி), [127498ஏ], [127498பி]

பளை

[125490ஏ]

பருத்தித்துறை

(111472ஏ), (111507ஏ), (120154ஏ), (120154பி), (122167 ஏ), (122167பி), (132628 ஏ), (132628பி),

சண்டிலிப்பாய்

[108381ஏ], [103381பி], [103381சி], [103381டி], [103381ஈ], [103381எவ்], [103381ஜி], [117422ஏ], [121674ஏ], [123349ஏ], [123349பி], [123629ஏ], [123629பி], [125099ஏ], [125172ஏ], [125326ஏ], [127024ஏ], [127025ஏ], [127025பி], [127094ஏ], [127382ஏ], [127441ஏ], [127441பி], [127441சி],

தெல்லிப்பழை

(121431ஏ), (125091ஏ), (127043ஏ), (127307ஏ), (127439ஏ), (127439பி), (127439சி), (127440ஏ), (127494ஏ).

உடுவில்

[123838ஏ), [123856ஏ], [123856பி], [123882ஏ], [118302ஏ], [118302பி], ]121566ஏ], [121576ஏ], [121576பி], [124981ஏ], [124995ஏ], [125000ஏ], (125019 ஏ], (125019 பி), (125256 ஏ), (125353 ஏ), (125353 பி), (125358 ஏ). [125358 பி], (127011 ஏ), (127045 ஏ), (127052 ஏ), (127063 ஏ), (127063 பி), (127063 சி), (127063 டி], (127073 ஏ): (127301 ஏ), (127301 பி). (127313 ஏ), [127461 ஏ), (1274[illegible]), (127461 சி], [1274[illegible]], [127500 ஏ].

# விவசாய சம்மேளனங்களுக்கு தெளிகருவிகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 1

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் உடுவில் கமநல சேவை பிரதேசத்துக்கு உட்பட்ட விவசாய சம்மேளனங்களுக்கு உருக்கினாலான 41 கைத் தெளி கருவிகள் வழங்கப்படவுள்ளன.

2 லட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்படவுள்ள இந்தத் தெளிகருவிகள் கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக உடுவில் கமநல சேவை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாய சம்மேளனங்களுக்கு 2தெளிகருவிகள் வீதம் வழங்கப்படவுள்ளன.

விவசாய சம்மேளனங்கள் மூலம் இந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த கட்டணத்தில் இந்தத் தெளிகருவிகள் வாடகைக்கு வழங்கப்படும்.

(இ-9)

# பொருள்களின் விலை வன்னியில் உயர்வு!

வவுனியா, டிசெ. 1

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் அத்தியாவசிய உணவுப பொருள்களின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சீனி 75 ரூபாவாகவும் மா 45 ரூபாவாகவும் உழுந்து 90 ரூபாவாகவும் மண்எண்ணெய் ஒரு போத்தல் 150 ரூபாவாகவும் தேங்காய் 30 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை-மன்னார் பள்ளிக்குடா ஊடாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு ஜீ. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான காகிதாதிகளை அண்மையில் எடுத்துச் சென்ற செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் தற்போது அங்கு தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக அங்குள்ள வீதிகள் பலவும் மிகவும் மோசமானநிலையில் உள்ளதாகத் தெரிவித்தனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையிலான போக்குவரத்து கடந்த மூன்று வாரங்களாகத்தடைப் பட்டுள்ளமை தெரிந்ததே.

(உ-7-164)

# நவம்பர் இறுதி வரை 240 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, டிசெ. 1

ஜனாதிபதி தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நவம்பர் 30 ஆம் திகதி வரை 240 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று ஜனாதிபதித்தேர்தலுக்குப்பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் 180 முறைப்பாடுகள் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு எதிரானது என்றும் ஏனையவை ஐ தே க. மற்றும் ஜே வி. பி.க்கு எதிரானவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)


யூரோமைன்ட்

அக்ரீவ் மல்ரி டிரைக்ஷனல்

அன்டனாவில் பூஸ்டர் பொருத்தப்பட்டுள்ளது



* அனைத்து அலைவரிசைகளிற்கும் ஒரே அன்டனா
* ஜேர்மன் தொழில்நுட்பம்

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place, (Behind Milk Bar), Bambalapitiya Junction,
Colombo 4. Tel: 589992

(சி/9856])



மனையியல் டிப்ளோமா பயிற்சி

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

★ நவீன ஆடை தயாரித்தல், பூவேலை. கைப்பணி, சமையற் கலை, பெயின்ரிங், கேக் ஐசிங், சிகை அலங்காரம், மணப்பெண் அலங்காரம்.

★ சுய தொழில் வாய்ப்பைப் பெற முயற்சிப்போர் 10-12-99 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

★ பயிற்சிகள் இலவசம்

இல.7, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

பணிப்பாளர், மகளிர் அபிவிருத்தி நிலையம்.

[71402]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு

• நெசவாளர்களும் • பயிலுநர்களும்

உடனடியாகத் தேவைப்படுகின்றது.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட புடைவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில்.

(சி/10014)


## அனுமதிபெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 1
ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன்கூட்டியே அனுமதி பெறவேண்டும் என பிரதேச சபை அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்குள் உட்பட்ட பகுதிகளில் முன் அனுமதி பெறாமல் கட்டடங்களை அமைப்பது அதிகரித்ததைத் தொடர்ந்தே இந்த நடைமுறை அமுல் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## புகையிலைச் செய்கை

யாழ்ப்பாணம், டிசெ. 1
வடமராட்சிப்பகுதி மேட்டு நிலப்பயிர்ச் செய்கையாளர்கள் புகையிலைச் செய்கைக்கான ஆரம்ப வேலைகளை மேற்கொண்டுள்ளனர்.

விவசாயிகள் முதல் நடவடிக்கையாக நிலத்துக்கு பச்சைக்குழைகளை இடும் பணியைத் தொடங்கியுள்ளனர். [இ-15]

## சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 1
யாழ். இந்துக்கல்லூரியில் உள்ள தொலைக்கல்வி நிலையத்தில் 1997 ஆம் ஆண்டிலிருந்து தொடர் கல்விப் பயிற்சி நெறியில் பங்குபற்றிய ஆசிரியர்களை எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு போதனாசிரியர் கேட்டுள்ளார். (இ-7)

## நுளம்பு வலைகள்

யாழ்ப்பாணம், டிசெ. 1
ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவின் கீழ் வறுமை நிலையில் உள்ள 42 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தாய்—சேய் நலன் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள இந்த நுளம்பு வலைகளால் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்த குழந்தைகளைக் கொண்ட குடும்பங்கள் நன்மை பெறவுள்ளன.

அதேவேளை ஊர்காவற்றுறைப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வீதிகளிலும் பொது இடங்களிலும் கால் நடைகள் இறந்து சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும் போது அவற்றை அகற்றும் கடமைகளை மேற்கொள்ள பிரதேச சபை பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-7]


## சாயி சிறுவர் இல்லம்

ஸ்ரீ சத்ய சாயி சேவா ஸ்தாபனங்களின்
வட பிராந்திய இணைப்புக்குழுவினால்
இந்த இல்லம் நடத்தப்படவுள்ளது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள
6 வயதுக்கும் – 10 வயதுக்கும் உட்பட்ட
தாய் / தகப்பன் அற்ற ஆண் பிள்ளைகளுக்கு
சில வெற்றிடங்கள் உள்ளன.

தகுதியுடைய பிள்ளைகள் உள்ள உறவினர்/பாதுகாவலர் 99-12-09 ஆம் திகதி வியாழக்கிழமை குறிப்பிட்ட விலாசத்துக்கு காலை 9.00 மணிக்கு கிராம சேவகரின் அத்தாட்சிப் பத்திரத்துடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

– நிர்வாகம்

இல. 107, ஆனந்தன் வடலி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (71371)



## 2000 ஆம் ஆண்டு பாடசாலை தொடக்கத்துக்கான மலிவு விற்பனை

ஆசீர்வாதம் புத்தகசாலை என முன்னர் இயங்கிய எமது ஸ்தாபனம் 1-9-99 தொடக்கம்

**துர்க்கை அம்பாள் புத்தகசாலை**

எனப் பெயர்மாற்றப்பட்டு புதுப் பொலிவுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை மீண்டும் அறியத்தருகின்றோம்.

எம்மிடம் மாணவர்களின் நலன் கருதி
2000 ஆம் ஆண்டுக்கான
பாடசாலை ஆரம்பத்தை முன்னிட்டு
1-12-1999 தொடக்கம் 15-1-2000 வரை
சகலவகையான அப்பியாசக் கொப்பிகள், C.R கொப்பிகள்
காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள்,
பாலர் புத்தகங்கள்முதல் பல்கலைக்கழகங்கள் வரையிலான
பாட நூல்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

**துர்க்கை அம்பாள் புத்தகசாலை**
23, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.

(சி/10028)



## விவேகானந்தரின் குரல்

ஓம்

### அழகிய கலண்டர்

சிந்தனை முத்துக்கள் பொதிந்த புத்தகம் இலவசம்
கலண்டரை வாங்கத் தவறாதீர்கள்;
இலவச நூலை மறவாதீர்கள்.

✠ விலை ரூபா 50 மட்டுமே

கிடைக்குமிடம்:

() சிவசம்பு களஞ்சியம்
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

() லக்ஷ்மி ஸ்ரோர்ஸ்
நெல்லியடி.

() கவிதா ரேடேர்ஸ்
பருத்தித்துறை.

() பாலன் விற்பனை நிலையம்
பருத்தித்துறை:

செயலாளர்
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

(சி/ 10024)


## வாழ்த்துகின்றோம்



### உயர்திரு. கு. விமலதாஸ்

சேர் பொன். இராமநாதன் கட்டிய யா/உசன் இராமநாதன் கல்லூரி காலத்தால் கரைந்தும் சிதைந்தும் கசிந்தும் போனது.

அப் பெருமகனாரின் கனவைக் கலைய விடாது கட்டடத்தைத் திருத்தியும், புதுப்பித்தும், செதுக்கியும் புதுப்பொலிவூட்டியுள்ளார் உசன் பெற்ற உயர் மகனார்

**திரு. கு. விமலதாஸ்**

2001 இல் பவளவிழாக் காணும் பாடசாலைக்கு

அப் பெருமகன் அளித்த பரிசினைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பாடசாலை தயாராகிறது.

காலம்: **1-12-1999**
நேரம்: 8. 30
இடம்: யா/உசன் இராமநாதன்
மகாவித்தியாலய அரங்கு.

பாடசாலை அபிவிருத்திச்சபை. (71368)


BEACON
(வெலிங்டன் சந்தி)
ஆரம்பமாகி விட்டது
A/L 2000
DAY CLASS

Acc. பாலவாசன் 9 — 10
Eco. சண் 7 — 8
Com. சிவராஜா 10 — 11
Log. S.S. மனோகரன்
B st. தற்போதைய
பிரபல ஆசிரியர்

(71399)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1989 — 04 — 23
காரைநகர்



மறைவு
1998 — 12 — 01
யாழ்ப்பாணம்

### சுந்தரேசன் வர்ணனி

(திருக்குடும்ப கன்னியர் மடம்
ஆங்கிலப் பாடசாலை தரம் 4 மாணவி)

பாசத்தின் உறைவிடமே!
பண்பின் குலவிளக்கே!
ஆண்டு ஒன்று சென்றாலும்
எம் கண்முன்னே
உன் அருமை முகமும்
கனிவான புன்சிரிப்பும்
தோன்றுதம்மா வர்ணா!
உனை நினைந்து
ஏங்காத நேரமில்லை!

எங்கள் அன்பு மகளின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவை எண்ணித் தவிக்கும்
அன்பு அப்பா, அம்மா, தங்கை, தம்பி,
அம்மம்மா, அப்பாச்சி, மாமாமார், மாமிமார்,
சித்தப்பா, சின்னம்மா.

139, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (71299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மோசடிக்கு லைசென்ஸா?

ஜனாதிபதித் தேர்தல் இன்னும் மூன்று வாரங்களில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது. தேர்தல் களம் தெற்கில் சூடு பிடித்துள்ளது. வேட்பாளர்கள் ஏட்டிக்குப் போட்டியாக மக்களுக்கு வாக்குறுதிகளை வழங்கி வருகிறார்கள். ஒருவர் மீது அடுத்தவர் அரசியல் சேறு பூசவும் தொடங்கி விட்டார்கள்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதனையே பிரதான வேட்பாளர்கள் இருவரும் முதன்மைப்படுத்தித் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் பிரசாரத்தையும் வாக்குறுதிகளையும் விட இருவரில் ஒருவர் பதவிக்கு வந்த பின்னர் — கதிரையில் அமர்ந்த பின்னர் — எவ்வாறு செயற்படுவார்கள் என்பதனைப் பொறுத்தே இதில் முன்னேற்றம் தெரியும்;

வடக்கு — கிழக்கில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும், ஏன் அது தெற்கின் எந்தப் பகுதியிலும் எப்போதும் வெடிக்கலாம் என்ற பின்னணியிலும் —

நாடளாவிய ரீதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது நியாயமா என்ற கேள்விக்குப் பதில் இல்லாமலே தேர்தலுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன!

அது ஒரு புறமிருக்க, தெற்கின் ஏழு மாகாணங்களிலேனும் அமைதியான, நியாயமான தேர்தல் நடைபெறுமா என்ற சந்தேகம் பரவலாக உண்டு. அந்தச் சந்தேகத்தை மெய்யாக்குவது போல, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தா திங்கள் அதிகாலை தாக்கிச் சேதப்படுத்தப்பட்டிருக்கிறது.

தெற்கில் அரசியல் கட்சிகள் தங்களுக்கென அடியாள்களை வைத்திருப்பது ஒன்றும் இரகசியமல்ல. அதே போன்று ''தேர்தல் வெறி'' எவ்வாறு வன்செயல்களைத் தூண்டியுள்ளன; தேர்தல் குளறுபடிகளுக்குத் தூபமிடப்பட்டுள்ளன என்பதும் முந்திய அனுபவம்

ஏற்கனவே 240 தேர்தல் வன்செயல்கள் பதிவாகியுள்ளன. திங்களன்று அதிகாலை நடைபெற்ற சம்பவமானது, தேர்தல் நெருங்க நெருங்க நிலைமை மோசமாகலாம் என்பதற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது!

தேர்தல் மோதல்கள், வன்செயல்கள் என்பன தேர்தல் சுதந்திரமாகவும் மோசடிகளின்றியும் நடைபெறாது என்பதனையே சுட்டுவதாகும். பிரதான வேட்பாளர்களுக்கு இடையில் கடும் போட்டி நிலவும் சூழ்நிலையில், தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நியாயமாகவும் நடைபெறுவதற்கான முற்காப்பு நடவடிக்கைகள் அவசியம்.

இது விடயத்தில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் பங்கு முக்கிய இடம் பெறுகிறது. ஆனால் வெளிநாடுகளில் இருந்து அழைக்கப்படும் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தேர்தலை அவதானிப்பதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்; கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

நியாயமான, சுதந்திரமான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கு இந்தக் கட்டுப்பாடு — தடை — எந்த வகையில் உதவும்? இது வேண்டுமென்றே வினையை விலைக்கு வாங்குவது போலாகும். மோசடிகள் தில்லுமுல்லுகள் நிறைந்த தேர்தல் ஒன்றை நடத்துவதற்குப் பகிரங்க ''லைசென்ஸ்'' வழங்கியது போலவே இது உள்ளது.

நியாயமான முறையில் தெரிவு செய்யப் படாத ஒரு தலைவரைச் சிங்கள மக்களின் உண்மையான பிரதிநிதி என்று கொள்வது எவ்வாறு?

# மருத்துவ அறிவியலுக்கு சவாலாக பரவி வருகிறது எய்ட்ஸ் நோய்!

இன்று உலக 'எய்ட்ஸ்' விழிப்புணர்வுத் தினம். இதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகுகிறது.

விஞ்ஞானமும் மருத்துவமும் ஆக்கபூர்வமான சிந்தனையின் உச்சநிலைக்குச் சென்றுகொண்டிருக்கும். இன்றைய உலகில் மருத்துவ அறிவியலுக்கு சவாலாக 'எய்ட்ஸ்' எனும் நோய் இருந்து வருகிறது.

இந்த நோயானது மனிதனுடைய எல்லைமீறிய பாலியல் நடவடிக்கையினாலேயே மனித இனத்தினுள் நுழையத் தொடங்கியது.

இந்த நோயிலிருந்து மக்களைப்பாதுகாக்க மக்கள் மத்தியில் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதனால் ஏற்படும் தாக்கத்திலிருந்து தப்பிக்கொள்ளவே உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினமாக டிசெம்பர் 1 ஆம் திகதி பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது.

எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்களுடன் பாதுகாப்பற்ற முறையில் பாலுறவு கொள்வதன் மூலமும், எய்ட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவரின் இரத்தம் இன்னொருவருக்கு ஏற்றப்படுவதன் மூலமும் இந்த நோய் பெருமளவில் தொற்றிக் கொள்கிறது.

கர்ப்பமுற்றிருக்கும் ஒரு பெண்ணுக்கு இந்த நோய் ஏற்பட்டால் அது கர்ப்பத்தில் உள்ள குழந்தைக்கும் தொற்றுகின்றது.

எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரின் உடல் உறுப்புக்களை இன்னொருவருக்குத்தானம் செய்யும் போதும் இந்த நோய் தொற்றுவதற்கு வாய்ப்பு

**பஞ்சகன்**

அதிகம் ஏற்படுவதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் நோய்க்கிருமி தொற்றுள்ளவரின் குருதியுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்படும் போது கிருமிபரவலடைகிறது. மற்றும்படி ஒரு எயிட்ஸ் நோயாளிக்குஅருகே இருப்பதாலோ அவர் சாப்பிட்ட தட்டில் சாப்பிடுவதாலோ, அவருக்கு முத்தமிடுவதாலோ [வாயில் காயம் இல்லாதவிடத்து], அவரது உடைகளைப் பாவிப்பதாலோ நோய் தொற்றிக்கொள்ளும் என அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இந்த நோய் HIV எனும் நுண்கிருமியால் ஏற்படும் ஒரு நோய் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கிருமி மனித உடலில் நோய்களுக்கு எதிராகத் தொழிற்படும் எதிர்ப்புச் சக்தியை உருவாக்கும் கலங்களை அழிப்பதனால் இந்த நோய்த்தொற்று ஏற்பட்டவர்களின் உடல் நோய் எதிர்ப்புச் சக்தியை இழந்து விடுகிறது. இதனால் எய்டஸ் நோயாளியின்உடலில்நோய்க்கிருமிகள் இலகுவாகத்தொற்றுநோயை ஏற்படுத்திவிடுகின்றன

எய்ட்ஸ் AIDS என்பது A-Acquired, I Immuno, D-Deficiency, S Syndrome எனும் ஆங்கிலப் பதங்களின் சுருக்கமே. அதாவது. எய்ட்ஸ் எனப்படுவது நோய் எதிர்ப்புச் சக்தியின் குறைபாட்டு அறிகுறிகளின் கூட்டு ஆகும்.

ஆனாலும் இன்றைய உலகின் சமூககட்டமைப்புக்கள், வாழ்க்கை முறைகள், வசதிகள் என்பனஎய்ட்ஸ்நோயைப் பரப்புவதில்முன்நிற்கின்றன

2005 ஆம் ஆண்டளவில் இலங்கையில் 8 ஆயிரம் பேர் எச். ஐ. வி தொற்றுக்கு உட்படுவர் என்றும், இவர்கள் 15 தொடக்கம் 64 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருப்பர் எனவும் ஐ நா. அபிவிருத்தித்திட்டம் தெரிவிக்கிறது.

உலகில் 3 கோடிக்கும் மேற்பட்டமக்கள்எச் ஐ.வி தொற்றுடன் வாழ்ந்து வருகின்றனர் இவர்களுள் 1 கோடி 20 லட்சம் பேர் எய்ட்ஸ் காரணமாக உயிரிழந்து விட்டனர் உலகலாவிய ரீதியில் நோக்குமிடத்து நாளாந்தம் 10 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட 7 ஆயிரம் பேருக்கு எச் ஐ வி வைரஸ் தொற்றுகின்றது ஒரு நிமிடத்துக்கு ஐந்து பேரை இந்த வைரஸ்தாக்குகின்றது.

இலங்கையில் முதன் முதலாக 1986 ஆம் ஆண்டு வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவர் முதலாவது எய்ட்ஸ் நோயாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டார் 1987 இல் வெளிநாட்டில் வாழ்ந்த இலங்கையர் ஒருவருக்கு எய்ட்ஸ் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டது

எது எவ்வாறாயினும் எய்ட்ஸைப் பரப்புவது சமூகக் காரணியாக இருந்தாலும் எய்ட்ஸைக் கட்டுப்படுத்துவது மனிதனால் முடியும். அந்த வகையில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற இறுக்கமான கலாசாரத்தைப் பின்பற்றுவதன் மூலமும் முறையான சுகாதார வைத்திய வசதிகள் மூலமும் எமது உடலை நாமே பேணிக் கொண்டு எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்தலாம். (இ)

# நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக புதிய வழக்கு

## ஆட்சியாளர்கள் நடவடிக்கை

இஸ்லாமாபாத், டிசெ.1

பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் முஷாரப்புக்கு எதிராகவும் நாட்டின் முப்படைகளுக்கு எதிராகவும் சதித் திட்டம் தீட்டியதாக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் மீது மற்றொரு வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளதாக இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஷெரீப்பும் அவரது சகாக்களும் துபாயில் இரகசியக் கூட்டம் ஒன்றை நடத்தினர் என்றும் —

அந்தக் கூட்டத்தில் ஜெனரல் முஷாரப்பை பதவி நீக்கம் செய்துவிட்டு அவரது இடத்தில் ஜெனரல் ஷியாவுதீனை நியமிப்பது என முடிவு செய்யப்பட்டது என்றும் —

கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையிலேயே இந்தப் புதிய வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நவாஸ் ஷெரீப்மீதும் அவரது சகாக்கள மீதும் ஏற்கனவே விமானக் கடத்தல், அசர துரோகம், கொலைச்சதி ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்கள் தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினமும் அவர்கள் கராச்சி பயங்கரவாத ஒழிப்பு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டு விசாரணைகள் இடம் பெற்றன.

அதேசமயம் —

பாகிஸ்தான் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை முன்னாள் பணிப்பாளர் சௌத்ரி நவாஸ் ஷெரீப்புக்கு எதிராக—இராணுவ ஆட்சியாளர்களுக்கு சார்பாக— நீதிமன்றில் சாட்சியமளிக்க முன்வந்ததை அடுத்து அவரை இராணுவ ஆட்சியாளர்கள் விடுதலை செய்துள்ளதாக 'ஏஜென்சி' செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-6-9)

## ரயில்-பஸ் விபத்தில் 8 பேர் பலி

பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் சுக்கூர் என்ற இடத்தில் பயணிகள் பஸ் ஒன்றின் மீது ரயில் மோதியதில் 8 பேர் பலியாகினர் 18 பேர் காயமடைந்தனர்.

கராச்சி நோக்கி சென்று கொண்டிருந்த ரயில், வீதிக் கடவையை கடக்க முற்பட்ட பஸ்ஸின் மீது மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

## நாளை

கார்த்திகை 16

வியாழக்கிழமை

திதி: தசமி

முன் இரவு 9.46 வரை.

நட்சத்திரம்: உத்தரம்

முற்பகல் 10.32 வரை.

சுபநேரம்: 7.45–9.15

ராகுகாலம்: 1.45 [illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

சத்தியத்தைப் புறக்கணிப்பதாலும், தீயோர் சேர்க்கையினாலும்பொறாமை தோன்றுகிறது. நல்லோர், பெரியோர இணக்கமும் அவர்க [illegible] யும் அதை ஒழித்துவிடுகிறது

—மகாபாரதம்

## செச்சினியாவில்

# தலைநகர் குறோஸ்னிக்கு அருகே சண்டைகள் தீவிரம்

**உலக அரங்கில்**

குறோஸ்னி, டிசெ. 1

செச்சினியத் தலைநகர் குறோஸ்னிக்கு அருகே ரஷ்யப் படையினருக்கும் செச்சினியப் போராளிகளுக்கும் இடையிலான சண்டைகள் தீவிரமடைந்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக பின்வாங்கிவந்த தீவிரவாதிகள் தற்போது ரஷ்யப்படைகள் மீது மூர்க்கமாகத் தாக்கி வருவதை அடுத்தே போர் தீவிரமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தலைநகர் குறோஸ்னிக்கு அருகில் உள்ள முக்கிய கிராமம் ஒன்றைத் தாம் மீண்டும் கைப்பற்றி உள்ளதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர். அதேவேளை குறேஸ்னிக்கு செல்லும் தெற்குப்புற பாதையான உருஸ்மாற்றினைக் கைப்பற்றி, தலைநகருக்கான விநியோகப் பாதை அனைத்தையும் மூடிவிட்டதாக ரஷ்யப்படைகள் அறிவித்துள்ளன

நேற்று முன்தினம் நடைபெற்ற சண்டையில் தாம 65 தீவிரவாதிகளைக் கொன்றுள்ளதாகவும் ரஷ்யப் படை அதிகாரிஒருவர் தெரிவித்தார்

அதேசமயம் —

செச்சினியாவில் ரஷ்யப் படையினர் நடத்திவரும் தாக்குதல்கள் ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரம என்று பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் தெரிவித்துள்ளார் (இ 6-9)

# ருஷ்டிக்கு கலாநிதிப் பட்டம் பேர்லின் பல்கலை. வழங்கியது

பேர்லின் டிசெ. 1

சர்ச்சைக்குள்ளான எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு ஜேர்மனியின் பேர்லின் தாராளப்பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி உள்ளது.

அவரது வாழ்வுக் காலத்துக்கான எழுத்துப் பணியைப் பாராட்டி இந்தப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது. பேர்லின தாராளப் பல்கலைக்கழகத்தில் தீவிர பாதுகாப்புக்கு மத்தியில் ருஷ்டிக்கு விருது வழங்கப்பட்டது.

நோபல் பரிசு பெற்ற இருவர் புடைசூழ்ந்து அழைத்து வர ருஷ்டி தனது பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இலக்கியத்துக்கான இந்த ஆண்டு நோபல் பரிசு பெற்ற ஜேர்மன் எழுத்தாளர் குந்தர் கிராஸ் மற்றும் 1994 ஆம் ஆண்டு நோபல் பரிசு வென்ற ஜப்பானியர் கென்ஸாபுரோ ஆகியோர் ருஷ்டியை மேடைக்கு அழைத்துச் சென்றனர்.

பட்டம்பெற்ற பின்னர் ருஷ்டி தனது புதிய நூலான 'அவனது காலடி நிலம்' என்ற நூலில் இருந்து சில பகுதிகளைவாசித்துக் காட்டினார்

இந்தியாவில பிறந்த ருஷ்டி தற்போது பிரிட்டனில் வாழ்ந்து வருகிறார் அவர் எழுதிய சாத்தானின் கவிதைகள் என்ற நூல் இஸ்லாம் சமயத்தைய இழிவுபடுத்துவதாகக் கூறி 1989 ஆம் ஆண்டு அப்போதை ஈரானிய அதிபரினால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. — கடந்த ஆண்டு தான் அந்தத் தண்டனை விலக்கிக் கொள்ளப்பட்டது. (இ-6-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தும் அடக்குமுறைகள், கெடுபிடிகள் நிறுத்தப்படவேண்டும்

## வாசுதேவ நாணயக்கார கோருகிறார்

கொழும்பு,டிசெ.1

தமிழ் மக்களை யுத்தம் மற்றும் பாதுகாப்பு என்னும் பெயரால் இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தும சகல வகையான அடக்குமுறைகள், கைதுகள், கெடுபிடிகள் அனைத்தும் நிறுத்தப்படல்வேண்டும். அத்துடன் நீதி விசாரணை இன்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி வேட்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவநாணயக்கார "தமிழ் மக்களுக்கு வாசுதேவாவின் வேண்டுகோள்" என்ற தலைப்பில் விடுத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கியதேசியக்கட்சியும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளையும் கோரிக்கைகளையும் தொடர்ந்து நிராகரித்து ஏமாற்றி வந்துள்ளனர். அதேவேளை யுத்தத்தை வளர்த்து தமிழ்மக்கள் மீது விவரிக்க முடியாத துன்பதுயரங்களை சுமத்தி வந்துள்ளன. அதே போன்று முழு நாட்டையும் மக்களையும் ஏமாற்றி நாசகாரப் பாதையில் இட்டு வந்துள்ளன. இந்நிலையில் இந்த இரு ஆளும் சக்திகளுக்கும் அப்பால் மூன்றாவது அரசியல் சக்தியாக ஜனநாயக இடதுசாரி முன்னணியைத் தோற்றுவித்துள்ளோம். அதன் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன்.

யுத்தம் உடனடியாக நிறுத்தப்படல்வேண்டும். பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டு நியாயமான அரசியல் தீர்வு காணப்படல் வேண்டும். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கப்பட்டு புனரமைப்பு செய்யப்படல்வேண்டும்.

மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் வகையில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் வடக்கு - கிழக்கு இணைந்த சுயாட்சிநிலை நிறுத்தப்படல் வேண்டும். முஸ்லிம் மக்களின் தனித்துவம் தன்னடையாளங்கள் பேணப்படும் வகையில் சுயாட்சியில் உரிய இடம் வழங்கப்படல் வேண்டும். மலையக மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளை வழங்கவும் பாதுகாக்கவும் உரிய அமைப்பு ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

தமிழ் மக்களை யுத்தம் - பாதுகாப்பு என்னும் பெயரால் இரண்டாம் தரமாக நடத்தும்சகல வகையான அடக்குமுறைகள், கைதுகள், கெடுபிடிகள், பாகுபாடுகள் அனைத்தும் நிறுத்தப்படல் வேண்டும். நீதி விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்தல் வேண்டும்.

வடக்குக்கு போதிய உணவு, மருந்து மற்றும்அத்தியாவசிய பொருள்கள் அனுப்பப்பட்டு சாதாரண விலைகளுக்கு வழங்கப்படல்வேண்டும். இயல்பு வாழ்க்கைக்கு தடையாக உள்ள அனைத்தும் அகற்றப்படல் வேண்டும்.

வன்னி மாவட்டத்தில் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உயிர்வாழ்வதற்குரிய உணவு, உறைவிடம், மருந்து, எரிபொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் அனைத்தும் கிடைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தமது இயல்புவாழ்வுக்குத் திரும்பவும் சுதந்திரம், சமாதானம், சுபீட்சம் என்பவற்றைப் பெறவும் நாட்டின் அனைத்து மக்களுடன் ஒன்றிணைந்து சமத்துவமாக வாழவும் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் உற்றநண்பனாக, தோழனாக உங்களுடன் வாழ்ந்து உங்கள் உரிமைகளுக்காகவும் உங்களுக்கு எதிரான அநீதி, அடக்குமுறைகளுக்கு எதிராகவும் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் போராடி வந்துள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். தொடர்ந்தும் உங்களுடன் இருந்து நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் குரல் கொடுத்துப் போராடவும் பணிபுரியவும் உங்கள் பலத்தை மேலும் பலமடங்காக எனக்குத் தரவேண்டும்- என்றுள்ளது. (இ-4)

### ரூ. 15 ஆயிரம் நிதி உதவி

வலி.தென்மேற்கு,டிசெ.1

பிரதேச சபைகளின் கீழ் இயங்கும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கு மருந்துக் கொள்வனவுக்காக 15ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை மாகாணஆயுள்வேத திணைக்களம் யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவிஆணையாளர் ஊடாக அனுப்பிவைக்க உள்ளதாக ரி.வி.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15 ஆயுள்வேத வைத்தியசாலைகளுக்கும், இந்த நிதிவழங்கப்படவுள்ளது. (இ-185)

### பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.1

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலைஅதிபர்,ஆசிரியர்கள் ஆகியோரை பாராட்டிக்கௌரவிக்கும் நிகழ்வுநாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பாடசாலைஅபிவிருத்திச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்த நிகழ்வில் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர். (இ-6)


## நகரசபை, சாவகச்சேரி
## வரவு செலவுத்திட்டம்-2000

**(255ஆம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 1979ஆம் ஆண்டின் 13ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178(3)ஆம் பிரிவின் பிரகாரம் இச்சபையால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட 2000ஆம் ஆண்டுக்குரிய வரவுசெலவுத்திட்டம் இச்சபையில் 07-12-1999 ஆம் திகதி தொடக்கம் ஏழு(7) நாள்களுக்கு அலுவலக நேரங்களில் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

**மு.செ.சரவணபவ**
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
29-11-99.

(C/10035)



## பொது அறிவித்தல்

**சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தனியார் மருந்து விற்பனை நிலையங்களில் பென்சிலின் ஊசிமருந்து, கருத்தடை ஊசிமருந்து போடுதல், வைத்தியர்களின் ஆலோசனை இன்றி மருந்து விநியோகித்தல் என்பன நடைபெறுவதாக அறிகிறேன். இவை உடல் ஆரோக்கியத்தைக் குன்றச் செய்வதுடன் உயிராபத்தையும் ஏற்படுத்தலாம். இத்தகைய நோயாளர்கள் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.**

**எனவே மருத்துவரின் ஆலோசனையின்றி எந்தவித மருந்துகளையும் விற்பனை செய்யவேண்டாம் எனவும் அத்தகைய வியாபாரத்தில் ஈடுபடுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.**

**சி.யமுனானந்தா,**
பதில் சுகாதார வைத்திய அதிகாரியும்
மாவட்ட வைத்திய அதிகாரியும்.
சாவகச்சேரி.

(C/10027)



ஓம்

**புத்தாயிரம் ஆண்டில் புதுப்பொலிவுடன்**
**YARL HALL கல்விநிலையம்**
**93A, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

கிளை நிறுவனம்
**49, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.**

தரம் 4 முதல் O/L வரை
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**05 - 12 - 99**
**விஞ்ஞானம்**
**இரா. செல்வவடிவேல்**

(71391)



## வலிகாமம் கல்விவலய நலன்புரிக்கழக வளர்ச்சிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டு
### பரிசு பெற்ற இலக்கங்கள்

**நலன்புரிக் கழகத்தினால் சென்ற 1999.11.29ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு கழகத்தின் தலைவர் திரு. ச.வீரசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு விவரம்:**

**1 ஆம் பரிசு இல: 5446 -** **லுமாலா சைக்கிள்**
அன்பளிப்புச் செய்தவர்:- திரு. எம்.ரகுவேந்திரன், உரிமையாளர் 'தருவாயன்' யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு இல: 3422 -** **ஒலிப்பதிவுடன் கூடிய வானொலிப்பெட்டி.**
அன்பளிப்புச் செய்தவர்:- திரு. கு.கங்கைவேணியன், வேணி களஞ்சியம், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு இல: 3522 -** **மகளிர் கைக்கடிகாரம்.**
அன்பளிப்புச் செய்தவர்:- திரு. எஸ்.மார்க்கண்டு, அரச ஒப்பந்தக்காரர்., சுன்னாகம்.

**பத்து ஆறுதல் பரிசுகள் ஒவ்வொன்றும் ரூபா 500/- பெறுமதியான வெப்பக்குடுவைகள்.**

### அன்பளிப்புச் செய்தவர்கள்

| | | |
|---|---|---|
| 01) | 1486 | திருமதி றெஜினா இருதயநாதன், பி.க.ப. |
| 02) | 4150 | திருமதி றெஜினா இருதயநாதன், பி.க.ப. |
| 03) | 6164 | சுவீற்ஹனி வீடியோ & போட்டோ. |
| 04) | 4148 | செல்வி லலிதாதேவி நாகலிங்கம், ஆசிரியர்யா/இராமநாதன் கல்லூரி. |
| 05) | 0161 | திரு மு.திருஞானசம்பந்தபிள்ளை, இளை.அதிபர்,கொக்குவில். |
| 06) | 0819 | திரு மு.தளையசிங்கம், அதிபர்யா/பொன்பரமானந்த வித்தி. |
| 07) | 2940 | திருமதி ஆ.சிவஞானசுந்தரம், அதிபர்,யா/இராமநாதன் கல்லூரி. |
| 08) | 6744 | திரு. க.கந்தசாமி, தயா மரக்காலை, சுன்னாகம். |
| 09) | 7625 | திரு. வி.ஜெயக்குமார், அதிபர், யா/ஈவினை, அ.த.க.பா. |
| 10) | 7808 | செல்வி போ.கந்தசாமி, அதிபர், யா/பண்.மகளிர்கல்லூரி. |

மேற்படி அதிர்ஷ்டசாலிகளை சுன்னாகம் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர்களும் கல்விப்பணிப்பாளரும் பங்குகொண்டு தெரிவுசெய்தனர். பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளை பாராட்டுவதுடன் கழகத்தின் அதிர்ஷ்டலாபச்சீட்டுக்களையும் மனமுவந்து பெற்ற அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பரிசுபெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கு வலிகாமக் கல்வி வலயத்தில் **1999-12-03**ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு பரிசுகள் வழங்கப்படும்.

உரியவர்கள் சமுகமளிக்குமாறு வேண்டுகின்றோம்.

**ச. வீரசிங்கம்**
தலைவர்

**ப. பாலசுப்பிரமணியம்**
செயலாளர்.

(C/10039)



## அறிவித்தல்

மீசாலை வடக்கில் கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும், நடராச வீரகத்திப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா உள்ளிட்ட பரிபாலன சபையானது **10-10-1999** ஞாயிற்றுக்கிழமை அதன் தலைவர் வடிவேலு ரவிச்சந்திரன் தலைமையில் கூடியபோது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது என்பதை இத்தால் மக்களுக்கும், அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம்.

ஆலயத்தின் கட்டட திருப்பணிவேலைகள் நிதிப்பற்றாக்குறை காரணமாக ஸ்தம்பிதம் அடையும் நிலையில் உள்ளதாலும், குறித்தகாலத்தில் திருப்பணி வேலைகளை நிறைவுசெய்து கும்பாபிஷேகம் செய்ய ஏறக்குறைய மேலும் ரூபா 500,000/- வரை நிதி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாலும்,

குறித்த கோவிலுக்குச் சொந்தமானதும் மீசாலை மேற்கில் அமைந்துள்ளதுமான 'ஆள்வான் வளவு' நி.பர. 14 கொண்ட ஆதனத்தில் நி.பர. 10 ஐ நீதிமன்ற அனுமதியுடன்அறுதிவிற்க பரிபாலனசபையும், தர்மகர்த்தாவும் நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆகவே இந்த ஆதனத்தை கொள்வனவு செய்ய விரும்புவோர் மற்றும் இந்த விற்பனைக்கெதிரான ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்க விரும்புவோர் இந்த அறிவித்தல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 14 நாள்களுக்குள் தமது விலை விவரத்தை அல்லது ஆட்சேபனைகளை குறித்த கோவிலின் தர்மகர்த்தா திரு.ந.சுவாமிநாதனிடம் அல்லது மீசாலை வடக்கு ஜே. 321 பகுதியின் கிராமசேவையாளர் கே.சுந்தரராசா அவர்களிடம் தெரிவிக்குமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இங்ஙனம்,
**தர்மகர்த்தாவும், ஆலய பரிபாலன சபையினரும்.**

*நடராச வீரகத்திப்*
*பிள்ளையார் ஆலயம்.*
*மீசாலை வடக்கு.*

(C/10029)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச் சுற்றுலாக்களின்போது

# மாணவரை கண்காணிப்பது அவசியம்

## மரண விசாரணையின்போது அறிவுறுத்தல்

நெல்லியடி, டிசெ. 1

''கல்வித் திணைக்களத்தின் செவ்வனே திட்டமிடப்படாத செயலினால் மாணவர்கள் நால்வர் வீணாகப் பலியாகியுள்ளனர். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் கல்விச் சுற்றுலாக்களின் போது மாணவர்களைக் கண்காணிக்கக் கூடிய அனுபவமுடைய ஆசிரியர்களும் அங்கு சமுகமளிக்க வேண்டும்.''

பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடந்த 17 ஆம் திகதி கல்விச் சுற்றுலாவின் போது மரணமடைந்த ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நால்வரதும் மரண விசாரணையின் போது, அங்கு சமுகமளித்த வடமராட்சி கல்வி வலய கல்விப் பணிப்பாளர் உட்பட ஏனைய எண்மருக்கும் அறிவுரை வழங்கிய, பதில் நீதிவான் சு. பா. சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மரண விசாரணை கடந்த 21 ஆம் திகதி இரண்டாவது நாளாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் சு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில் இடம்பெற்றது.

அங்கு அறிவுரை கூறிய பதில் நீதிவான் தெரிவித்ததாவது:—

இன்பருட்டிக் கடலில் கரையிலிருந்து சுமார் 9 மீற்றர் தூரத்தில் கள ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக் கள ஆய்வில் வடமராட்சி வலய கல்விப் பணிமனையில் கடமையாற்றும் விஞ்ஞான பகுதிக்கான உயரதிகாரிகள் கலந்து கொள்ளவில்லை. அத்துடன் அனுபவம் மிக்க கல்லூரி ஆண் ஆசிரியர்களும் கலந்து கொள்ளவில்லை. இதனால் மாணவர்களின் நடவடிக்கைகளைக் கண் காணிக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் அங்கிருக்கவில்லை என்பதை சாட்சியங்கள் மூலம் அறிய முடிகின்றது.

இது கல்வித் திணைக்களத்தின் செவ்வனே திட்டமிடப்படாத செயலினால் சம்பவித்துள்ளது போல் எனக்குத் தோன்றுகின்றது. எதிர்காலத்தில் இத்தகைய கள ஆய்வுகளை அல்லது கல்விச் சுற்றுலாக்களை நிகழ்த்தும் போது பெற்றோர்களில் ஒரு பகுதியினரையும் அனுபவம் முதிர்ந்த ஆசிரியர்களையும், அழைத்துச் செல்ல வேண்டும். அத்துடன் கால நிலையைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கள ஆய்வானது குறித்த தினத்தில்தான் நடைபெற வேண்டியதில்லை. கால நிலையைக் கருத்திற்கொண்டு அது பிற்போடப் படலாம். இத்தகைய துயரச் சம்பவங்கள் எதிர் காலத்தில் நிகழாதிருக்க சகலரது ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டும்— என்றார்.

இம் மரணங்கள் நான்கும் நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மரண விசாரணையின் போது வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர், தொண்டமானாறு வெளிக்கள நிலையத் தலைவர் உட்பட எண்மர் சாட்சியமளித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணி ஏ.கே.நடராஜா ஆஜரானார்.

[இ-109]


# திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

# புலர்வு 2000

## - புத்தாயிரப் புகுவிழா -

**காலம்: 01, 02, 03 டிசெம்பர் 1999**
(புதன், வியாழன், வெள்ளி)

**இடம்: மன்ற அரங்கு**
தினமும் பி. ப. 5-30 மணி

**1 ஆம் நாள் நிகழ்வுகள் (1-12-99)**

★ கரகம் ★ காவடி ★ புரவியாட்டம்
★ அம்பா ★ கோலாட்டம் ★ ஒயிலாட்டம்
★ இசையும் அசைவும்

இன்னும் பல கிராமிய நிகழ்வுகள்

**2 ஆம் நாள் நிகழ்வுகள் (2 - 12 - 99)**

卐 பொது அறிவு 'வினாடி வினா' இறுதிப்போட்டி
யா/பரியோவான் கல்லூரி
எதிர்
யா / சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

卐 ''சுருதிலய பிறழ்வுப்பாடல்'' போட்டி

卐 சிறப்பு நிகழ்ச்சி
திருமறைக் கலாமன்ற இளையோர் வழங்கும்
**''புத்தாயிரத்தின் பூபாளம்''**
(இசை நிகழ்ச்சி)

**3 ஆம் நாள் நிகழ்வுகள் (3 - 12 - 99)**

தலைமை;
துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(யாழ். பல்கலைக்கழகம்)

✠ பாராட்டு விழா
'அகவை 60'
அருட்கலாநிதி நீ. மரியசேவியர் அடிகள்

✠ 'கலைத்தூது' மலர் வெளியீடு
கௌரவ பிரதி பெறுபவர்;
கலாநிதி க. குணராஜா
பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்

✠ விவாத நடனம்

✠ சிறப்பு நிகழ்ச்சி
திருமறைக் கலாமன்றம் வழங்கும்
**'ஊழிக் கோலம்'**
(நவீன நாடகம்)

(கி/10047)


## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

வலி. கிழக்கு டிச. 1

கோப்பாய், இருபாலைப் பகுதியில் இன்று முதல் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு அப்பகுதி பொதுச் சுகாதாரப் பகுதியினரும் பிரதேச சபையினரும் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளனர்.

இப்பகுதிகளில் வீதிகளில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களை நஞ்சூட்டி அழிக்கும் நடவடிக்கைகள் இன்று முதல் தொடர்ந்து சிலநாள்களுக்கு நடைபெற இருப்பதால் வளர்ப்பு நாய்களை கட்டி வளர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையினால் உரிமப்பட்டி கட்டப்படாத நாய்கள் வீதிகளில் எங்கு காணப்பட்டாலும் நஞ்சூட்டி அழிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ். மத்திய கல்லூரி கத்தோலிக்க கிறிஸ்தவ மாணவர் மன்றத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா இன்று காலை 9. 30 மணிக்கு கல்லூரி தம்பர்மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வண. க. கருணசேகரவும் சிறப்புவிருந்தினராக வண. பிதா பயஸ் அடிகளாரும் கலந்துகொள்வர். (ஐ-3)

★ ★ ★

யாழ். கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9. 30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஐ-3-51)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், டிசெ, 1

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் தொடர்ந்து இடம் பெறவுள்ள திரைப்படமாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகள் வரிசையில் புதுமைப்பித்தனின் 'உதிரிப்பூக்கள்' என்னும் திரைப்படம் வீடியோக் காட்சியாக எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. ஆர்வமுடையோர் எவரும் இப் படக்காட்சிக்கு வருகை தரமுடியுமென இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்தார். (ஐ-3)

## எய்ட்ஸ் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 1

'எய்ட்ஸ் தினமான இன்று யாழ். மாநகர சபை சுகாதார அதிகாரி பணிமனையில் டாக்டர் தெய்வேந்திரன் தலைமையில் எய்ட்ஸ் நோய் விழிப்புக் கருத்தரங்கு இடம் பெறும். (ஐ-4-8)

## உதைபந்தாட்டம்

'உதயன்' வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கும் வடமராட்சிக் கல்வி வலயத் திணைக்களமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி ம. ம.வி. மைதானத்தில் நடைபெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் நெல்லியடி ம. ம. வித்தியாலய அணியும் கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலய அணியும் மோதுகின்றன.

இந்த நிகழ்வுக்கு வடமராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் சி. சிவராஜா பிரதம விருந்தினராகவும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திருமதி ஏ. ஜே. ரூபநசிங்கா, யாழ். உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் எஸ் ரி. கணநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர் (ஐ-4-10)


# கண்ணீர்ப் பூக்கள்

எமது ஆலயத்தின் பிரதம குருக்களாகிய
சிவஸ்ரீ சதா மகாலிங்கசிவக் குருக்கள்
அவர்களின் அன்புத் தாயாராகிய

**திருமதி சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள்
கனகாம்பிகை அம்மா**

அவர்கள் நேற்று (30-11-99) இறைபதம் அடைந்தமையயிட்டு ஆறாத்துயர் அடைவதோடு துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் ஆறுதலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கண்ணீர்ப் பூக்களைச் சொரிந்து பிரார்த்திக்கின்றோம்.

ச. வைத்தியநாதன் ஐயா
(ஆலய பரிபாலகரும் அர்ச்சகரும்)

லிங்கவிநாயகர் தேவஸ்தானம்,
இருபாலை கிழக்கு.

(71432)



# ஆன்மார்த்த அஞ்சலிகள்

சிவஸ்ரீ சதா. ஆறுமுகக் குருக்கள் ( அமரர் )
சிவஸ்ரீ சதா. மகேஸ்வரக் குருக்கள்
(மத்திய நிர்வாக உறுப்பினர், அ. இ. சை. கு. அ. சபை)
சிவஸ்ரீ சதா. மகாலிங்கசிவக் குருக்கள்
(கௌரவ செயலாளர், அ. இ சை. கு. அ. சபை)
ஆகியோரின் அன்புத் தாயாராகிய

**திருமதி சிவஸ்ரீ சதாசிவக்குருக்கள்
கனகாம்பிகை அம்மா**

அவர்கள் 30-11-99 அன்று சிவத்துள் ஐக்கியமானதையிட்டு அன்னாருக்கு ஆன்மார்த்த அஞ்சலிகளைச் சொரிவதோடு துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைமைச் செயலகம்,
அகில இலங்கை சைவக் குருமார்
அர்ச்சகர் சபை,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

(71431)



# மரண அறிவித்தல்கள்

## கந்தையா கணபதிப்பிள்ளை

அச்சுவேலி பத்தமேனி வைரவர் கோயிலடியைச் சேர்ந்த கந்தையா கணபதிப்பிள்ளை 30—11—1999 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லர், முருகேசு, சின்னத்தம்பி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இலக்குமிபிள்ளையின் மைத்துனரும் பாலசிங்கம் [பிரான்ஸ்], துரைசிங்கம் [பத்தமேனி], இரத்தினசிங்கம் (பத்தமேனி), தருமகுலசிங்கம் (சுவிஸ்), புவிராசகுலசிங்கம் [சுவிஸ்], குமாரகுலசிங்கம் [வவுனியா], விஜயகுலசிங்கம் [பிரான்ஸ்], ராசகுலசிங்கம் (பிரான்ஸ்], காலஞ்சென்ற இராசகுமாரி, ஜெயவீரகுலசிங்கம் [பிரான்ஸ்], சிங்கம் [சுவிஸ்] ஆகியோரின் சிறியதந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (1-12-99) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இரத்தினசிங்கம்
(பெறாமகன்)

பத்தமேனி,
அச்சுவேலி.

(71427)

## தம்பு துரைச்சாமி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் நாவலடி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு-துரைச்சாமி 30-11-99 அன்று காலமானார்.

அன்னார் ஜெயரூபகாந்தியின் அன்புக் கணவரும் பத்மகாந்தி, ஹரிதாஸ், பரிமளகாந்தி, புஸ்பகாந்தி ஜெயசந்திரகாந்தி ஆகியோரின் மைத்துனரும் கதிரவேல், மகேந்து, பாக்கியம், தருமலிங்கம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 1-12-99 பிற்பகல் 1-00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஹரிதாஸ்
(மைத்துனர்)

நாவலடி லேன்.
மானிப்பாய்.

(71430)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரில் தேர்தல் சுவரொட்டிகள்

ஜனாதிபதித்தேர் தலைஒட்டி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான சுவரொட்டிகள் யாழ். நகரப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன.

வர்ண சுவரொட்டிகளில் ஒன்றில் ''தமிழன் என்ற பெருமையோடு வாழும் உரிமை தமிழர்களுக்கு உண்டு — சந்திரிகா'' என்ற வாசகமும் அவரது படமும் காணப்பட்டன. (ஐ-7-173)

---

**மடுவில்......**

(முதலாம் பக்கத் தொடர்)

சர்வதேச தொண்டு அமைப்புக்களை அங்கு பணியாற்ற வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும்— மன்னார் ஆயர் தெரிவித்தார்.

அம்புலன்ஸ் வசதி இல்லாததால் அவசர நோயாளர்களை வவுனியா ஆஸ்பத்திரிக்கு அனுப்ப முடியாத நிலைமை ஏறபட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

---

எமது புதிய ஓடியோ CD வெளியீடுகள்!

- பெண் ஒன்று கண்டேன்
- சுந்தரி நீயும் சுந்தரன் நானும்

மெலோடியஸ் மியூசிக்
303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/10050)

# புலிகளுடன் இரகசியப் பேச்சு முயற்சி:

# 'லியம்பொக்ஸ்' உடன்படிக்கையை ஜனாதிபதி சந்திரிகா மீறிவிட்டார்

## ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 1

எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் தமக்குத் தெரியாமல் — தகவல் தராமல் — விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்தமை ''லியம் பொக்ஸ்'' உடன்படிக்கையை மீறிய செயல் என ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை நேற்று அவர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தார்.

இனப்பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு முன்பாக இருதரப்பு இணக்கப்பாடு அவசியம்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவது என்ன பேசுவது என்பன தொடர்பாக அரசும் எதிர்க்கட்சியும் முதலில் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது 'லியம் பொக்ஸ்' உடன்படிக்கையின் சாரமாகும். ஆனால் ஜனாதிபதி அதை மீறி புலிகளுடன் இரகசியப் பேச்சு நடத்த முயன்றுள்ளார் — என்று ரணில் தெரிவித்துள்ளார். [ஐ-7]

---

**பாதுகாப்பு...**

(முதலாம் பக்கத் தொடர்)

குழுவின் யாழ். அலுவலகம் முன்பாக மேற்கொள்ளப்படவுள்ள இந்த அடையாள உண்ணாவிரதத்தை கைதாகிக் காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலரின் கடிதம் உண்மைக்கு முரணானது என்று தெரிவித்து அந்தக் கடிதத்தைத் திருப்பி அனுப்பப்போவதாகப் பாதுகாவலர் சங்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

---

**பல்கலைக்...**

(முதலாம் பக்கத் தொடர்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் மடுத் தேவாலயப் பகுதியில் நடைபெற்ற கோரமான சம்பவத்தையிட்டு ஆழ்ந்த மன வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளோம்

மடுப் பிரதேசம் இறைவனுக்குரிய இடமாக மட்டுமன்றி சமாதானப் பிரதேசமாகவும் இருந்ததை யாவரும் அறிவர். இவ்வாறான பகுதியில் கொடுமையான சம்பவம் இடம்பெற்றதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

---

## 100 பொதிகளில் தபால்கள் வரும்

யாழ்ப்பாணம், டிசெ, 1

காங்கேசன்துறைக்கு இன்று வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு கப்பல் மூலம் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 100 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய 55 தபால் பொதிகள் இங்கிருந்து அனுப்பிவைக்கப்படவுள்ளன. [ஐ-9]

## வெள்ளி முதல் பாடசாலை விடுமுறை

கொழும்பு, டிசெ. 1

சகல அரசாங்கப் பாடசாலைகளும் 3 ஆம் தவணை விடுமுறைக்காக எதிர் வரும் வெள்ளிக்கிழமை மூடப்பட்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி மீண்டும் திறக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், ஜி. சீ. ஈ. [சாதாரண] பரீட்சை ஆகியன காரணமாகமுன்கூட்டியே பாடசாலைகள் மூடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3-6]

---

**பாதை...**

(முதலாம் பக்கத் தொடர்)

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது:—

கடந்த மாதம் 2 ஆம் திகதிக்குப் பின்னர் வன்னிக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்கள் அனுப்பப்படவில்லை.

அவசர நோயாளர்களை அங்கிருந்து வெளியிடங்களுக்கு கொண்டுவர முடியவில்லை.

பெரும்பட்டினி நிலையில் உள்ள அந்தப் பிரதேச மக்களின் உயிர்களைக் காப்பாற்றவேண்டுமாயின் உடனடியாகப் போக்குவரத்துப் பாதை ஒன்று திறக்கப்பட வேண்டும்.

அந்தப் பாதை ஊடாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அனுப்ப ஏற்பாடு செய்யவேண்டும் — என்று தெவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

---

எமது வீடியோ CD வெளியீடுகள்!

- மனம் விரும்புதே உன்னை
- தாஜ்மஹால்
- வாட்டாகுடி இரணியன்
- சுந்தரி நீயும் சுந்தரன் நானும்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/10049)

---

**உணவு...**

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் மடுவுக்குத் திரும்பிய அவர் அங்குள்ள அவலநிலை குறித்து உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகின்றது

ஒரு பக்கம் உணவுப் பிரச்சினை; மறுபுறம் நோய்களின் கொடுமை. மழை பெய்வதால் போதிய இருப்பிட வசதிகள் இன்றி மக்கள் மழையில் நனைவதால் நோய்களுக்கு உள்ளாகிறார்கள். நோய்களுக்கு மருந்து பெற முடியாத நிலையால் அவர்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

மண்ணெண்ணெய் போத்தல் 170 ரூபாவாகவும் அரிசி கிலோ 40 ரூபாவாகவும் சீனி ஒரு கிலோ 70 ரூபாவாகவும் விற்பனையாகின்றன. அதுவும் சீனி 50 கிராம், 100 கிராம் என்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விற்பனையாகின்றது.

பாம்மா அறவே இல்லாத நிலை காணப்படுகின்றது.

பெரும் கஷ்ட நிலையில் மக்கள் அல்லற்படுவதை பார்க்கும் போது மன வேதனையாக இருந்தது என்றார் அவர். (ஐ-3)

---

## மரபுக் கவிதை போட்டியில் பரிசு பெற்றோர்

யாழ்ப்பாணம், டிசெ. 1

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நூறாவது பிறந்தநாளை முன்னிட்டு நடந்த போட்டிகளில் மரபுக் கவிதைக்கான பிரிவில் —

வே. குமாரசாமி [கோப்பாய் அரசினர் கலாசாலை விரிவுரையாளர்], பண்டிதர் சி. கார்த்திகேசு, மு. பாலசுப்பிரமணியம் [சந்திரபுரஸ்கந்தவரோதய ம. வி. ஆசிரியர்] ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளையும் —

க. முரளிதரன் [ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி] ஆறுதல் பரிசினையும் பெற்றுள்ளனர்.

நேற்றைய உதயனில் வெளியான போட்டி முடிவுகளில் மேற்படி விவரம் விடுபட்டுப் போயிற்று. [அ-8]

---

## பயிற்சி நெறி

யாழ். மாநகர சபை சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனை, யுனிசெவ், பட்டினிக்கெதிரான நிறுவனம் ஆகியன இணைந்து நடத்தும் வீட்டுத் தோட்டத் திட்டப்பயனாளிகளுக்கான 2 ஆம் கட்ட பயிற்சிநெறி நாளை வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி வண்ணார்பண்ணை, அரியாலை, கொழும்புத்துறை, குருநகர், நாவாந்துறை, கந்தர்மடம், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளதாக பட்டினிக்கெதிரான நிறுவன அதிகாரியொருவர் தெரிவித்தார். [ஐ-3-10

## கல்விக் கருத்தரங்கு

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் கட்டாயக் கல்வி தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் நா. சிவஞானம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது

இந்த நிகழ்வில் யாழ். கல்வி வலய கல்வி மேம்பாட்டு உதவிக் கல்விப் பணிப்பாளர் த. இராசலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி இ. சண்முகரத்தினம், யாழ். கல்வி வலய செயற்றிட்ட அதிகாரி ச. சிவானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-3)

## ரஷ்ய அதிபர் ஆஸ்பத்திரியில்

மொஸ்கோ, டிசெ. 1

ரஷ்ய ஜனாதிரதி பொரிஸ் யெல்ட்ஸின் நிமோனியா காய்ச்சல் காரணமாக மொஸ்கோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். [இ-6-9]

## வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10. 30 மணிக்கு 'வாக்கும் வாழ்வும்' என்ற தலைப்பில் இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய இளைப்பாறிய அதிபர் சைவப்புலவர் சு. செல்லத்துரை உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெறும்.

இந்த நிகழ்வுக்கான அறிமுக உரையை உடுப்பிட்டி க. சிவக்கொழுந்து நிகழ்த்துவார். (இ-30)

---

**கைதிகளுக்கு...**

(முதலாம் பக்கத் தொடர்)

ஆயிரக்கணக்கானோர்கலந்து கொண்டனர்.

ராஜீவ் கொலை வழக்குக் குற்றவாளிகளான நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் புகைப்படங்களைத் தாங்கிய ஊர்தி ஒன்று பேரணியின் முன்னால் சென்றது.

பேரணியில் கலந்துகொண்டோர் தமிழக முதல்வரை விழித்து மரண தண்டனையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரும் கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்றனர்.

இறுதியில் சென்னை கோட்டைப் பகுதியில் வைத்து முதல்வர் கருணாநிதியிடம் பேரணியில் கலந்து கொண்டோர் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (ஐ-7)

---

பாராட்டி வாழ்த்துகின்றோம்

மண்டைதீவு
தம்பியப்பா — வேதநாயகி தம்பதிகளின்
கனிஷ்ட புதல்வன்
திரு. த. காங்கேசபிள்ளை
அவர்கள்
(கணித விரிவுரையாளர், கணிதத்துறைத் தலைவர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
யாழ். பல்கலைக் கழகத்தின் கல்வியியல் துறையில்
''முதுதத்துவமாணி''
பட்டம் பெற்றமையைப்
பெருமகிழ்வுடன் பாராட்டி மேலும் உயர்வுற
வாழ்த்துகின்றோம்.
— மண்டைதீவு நண்பர்கள்.
(71428)

திரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்
கல்வியாண்டு 2000
தரம் 4 முதல் தரம் 11 வரை
ஆரம்பம்: 04-12-1999
(சனி 6 மணி)
(71387)

SCIENCE COLLGE
JAFFNA
அலகுரீதியான மீட்டல் வகுப்பு
(கடந்த கால வினாக்கள்)
PHYSICS — திரு. சம்பந்தன் B Sc.
HEAT
செவ், வியா. 7.00 — 8.00 ஆரம்பமாகிவிட்டது.
சனி, ஞாயிறு 10.00 — 11.00
ஆரம்பம்: 04 - 12 - 1999 10 a.m.
(71393)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்(பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org